**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/1293/2008**

**ஆணையர் அவர்களின் 20.01.2009 நாளிட்ட குறிப்பு**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :60/2009 பொருள் எண்.14

**நில உரிமை மாற்றம்**

மண்டலம்–8, வார்டு எண்.128, சர்வே எண்.85 பிள்ளையார் கோயில் தெரு பஞ்சாயத்து துவக்கப்பள்ளிக்கு எதிரிலுள்ள நிலத்தில் சிறுவர் விளையாட்டுத்திடல் அமைத்திட தக்க நடவடிக்கை எடுத்திடுமாறு வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழுத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது சம்பந்தமாக மேற்கண்ட நிலத்தினை மண்டலம்–8இன் உதவி செயற்பொறியாளர் மற்றும் வார்டு எண்.128ன் உதவி பொறியாளர் அவர்களுடன் கூட்டுப்புலத்தணிக்கை செய்தபோது 134.13 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட நெசப்பாக்கம் கிராமம், பிளாக் 2 நகர அளவை எண்.85ல் அடங்கியுள்ள சர்க்கார் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ள இந்த அரசு நிலத்தினை இப்பகுதியிலுள்ள மக்கள் வாகனங்கள் நிறுத்துமிடமாக பயன்படுத்தி வருவது அறிய வந்துள்ளது.

இந்த நிலத்தில் சிறுவர் விளையாட்டுத் திடல் அமைத்திடுவதற்காக, இந்த நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு நிலஉரிமை மாற்றம் செய்யுமாறு கோரி மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறுவதை எதிர்நோக்கி 02.05.08 (ம) 30.09.2008 நாளிட்ட கடிதங்கள் மூலமாக மாவட்ட ஆட்சியருக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட நிலத்தில் சிறுவர் விளையாட்டுத் திடல் அமைத்திடுவதற்காக சென்னை மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்திடுமாறு கோரி மாவட்ட ஆட்சியருக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை பெறுவதற்கு 8வது மண்டல வார்டுகுழு தனது தீர்மானம் எண்.793 நாள் 16.10.2008ல் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, மண்டலம்–8, வார்டு எண்.128ல் பிள்ளையார் கோயில் தெரு பஞ்சாயத்து துவக்கப் பள்ளிக்கு எதிரில், நெசப்பாக்கம் கிராமம், பிளாக் 2, நகரபுல எண்.85ல் உள்ள 134.13 ச.மீ. பரப்பளவு கொண்ட சர்க்கார் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட அரசுக்கு சொந்தமான நிலத்தினை சிறுவர் விளையாட்டுத் திடல் அமைத்திடுவதற்காக சென்னை மாநகராட்சிக்கு நிலஉரிமை மாற்றம் செய்யுமாறு கோரி மாவட்ட ஆட்சியருக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி நிலைக்குழு (வவிமநி மூலமாக) சமர்ப்பிக்கப்படுகிறது.

16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.28/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:நிமஉது.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :61/2009 பொருள் எண்.15

**திறந்த வெளி நிலம்**

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் கட்டட வரைபட அனுமதிகள் வழங்கும் போது கட்டட உரிமையாளர்களிடமிருந்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் நேரடியாக எடுத்துக் கொணட திறந்த வெளி நிலங்களை உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க முன் வந்துள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் இவ்வாறு நேரடியாக எடுத்துக் கொண்ட திறந்த வெளி நிலங்களை புலத்தணிக்கை செய்து பரப்பளவு விவரங்கள் சரிபார்த்து ஆக்கிரமிப்பு விவரத்தினையும் கண்டறிந்து இந்நிலங்கள் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் பட்சத்தில் இந்நிலங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக வார்டு குழுக்களின் பரிந்துரைகளை பெற்று அனுப்பிவைக்குமாறு அனைத்து மண்டல அலுவலர்களிடமும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன்பேரில் மண்டலம் – 5, வார்டு எண்.65 ல் ஏ.வி.எம். அவென்யூ, 2வது மெயின் ரோடு, விருகம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.14, நகர புல எண்.42 ல் உள்ள 1034.29 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட திறந்த வெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு 5வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.23, நாள் 22.10.2008 ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே மண்டலம் – 5 இன் வார்டு குழு பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கண்ட திறந்த வெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வவிமநி) மூலமாக சமர்பிக்கப்படுகிறது.

16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.29/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:நிமஉது.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/4200/2008
ஆணையர் அவர்களின் 19.01.2009 நாளிட்ட குறிப்பு

23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :62/2009 பொருள் எண்.16

திறந்தவெளி நிலம்

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் கட்டட வரைபட அனுமதிகள் வழங்கும் போது கட்டட உரிமையாளர்களிடமிருந்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் நேரடியாக எடுத்துக் கொண்ட திறந்தவெளி நிலங்களை உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க முன் வந்துள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் இவ்வாறு நேரடியாக எடுத்துக்கொண்ட திறந்தவெளி நிலங்களை புலத்தணிக்கைச் செய்து பரப்பளவு விவரங்கள் சரிபார்த்து, ஆக்கிரமிப்பு விவரத்தினையும் கண்டறிந்து இந்நிலங்கள் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் பட்சத்தில் இந்நிலங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக வார்டு குழுக்களின் பரிந்துரைகளை பெற்று அனுப்பி வைக்குமாறு அனைத்து மண்டல அலுவலர்களிடமும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன் பேரில் மண்டலம்–5, வார்டு எண்.66–ல் T.A.S. செல்லைய்யா தெரு, நடுவங்கரை கிராமம், பிளாக் எண்.9, நகர புல எண்.47/65 மற்றும் 47/66ல் உள்ள 216 ச.மீ பரப்பளவு கொண்ட திறந்தவெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து எடுத்துக்கொள்வதற்கு 5–வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.28, நாள் 22.10.2008–ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–5 இன் வார்டு குழு பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கண்ட திறந்தவெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து சென்னை மாநகராட்சி எடுத்துக்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வவிமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.30/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:நிமஉது.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.8.ந.க.எண்.அ1/791/2009**
**ஆணையர் அவர்களின் 12.02.2009 நாளிட்ட குறிப்பு**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :63/2009 பொருள் எண்.17

**நிலம் கையகப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–8, பகுதி–22, வார்டு–115ல் அமைந்துள்ள டி.டி.கே. சாலையானது பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை) மற்றும் அண்ணா சாலையை இணைக்கும் முக்கியமான சாலையாகும். அவ்வை சண்முகம் சாலை மற்றும் டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை ஆகியவற்றிலிருந்து பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை வரும் வாகனங்கள் பெருமளவில் இச்சாலை வழியாகவே செல்கின்றன. கவிஞர் பாரதிதாசன் சாலையில் இருந்து இச்சாலை குறுகலாக அமைந்திருப்பதால் வாகன போக்குவரத்தில் நெரிசல் ஏற்படுகின்றது. இதனை தவிர்க்கும் பொருட்டு, அச்சாலையில் உள்ள தனியாருக்கு சொந்தமான சில கதவிலக்கங்களின் நிலம் மற்றும் கட்டிடப் பகுதிகளை கையகப்படுத்தி, சாலை விரிவாக்கப் பணிக்கு உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–8, வார்டு–115ல் அமைந்துள்ள டி.டி.கே. சாலையில் சாலை விரிவாக்கப் பணிக்கு கையகப்படுத்தப்பட வேண்டிய தனியாருக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டிடப் பகுதிகளின் விவரம் பின்வருமாறு :–

| வ.எண். | கதவு எண் | கையகப்படுத்தப்பட வேண்டிய | |
|---|---|---|---|
| | | கட்டிடத்தின் பரப்பு | நிலத்தின் பரப்பு |
| 1. | 438 (தனியார்) | –– | 25.00 ச.மீ. |
| 2. | 440 (தனியார்) | 7.00 ச.மீ. | –– |
| 3. | 442 (தனியார்) | 81.00 ச.மீ. | –– |
| 4. | 444 (தனியார்) | 27.00 ச.மீ. | –– |
| 5. | 446 (தனியார்) | 24.00 ச.மீ. | –– |
| 6. | 448 (தனியார்) | 15.00 ச.மீ. | –– |
| | மொத்தம் | **154.00 ச.மீ.** | **25.00 ச.மீ.** |

இவ்விரிவாக்க பணி மூலம் டி.டி.கே. சாலை வழியாக வரும் வாகனங்கள் நெரிசல் இன்றி செல்ல ஏதுவாக அமையும். எனவே இத்திட்டத்தின் மூலம் சுமார் 154.00 ச.மீ. கட்டிடப் பரப்பு மற்றும் 25.00 ச.மீ. நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு, அந்நிலத்தை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத் தொகையினை செலுத்தி, நிலம் மற்றும் உடமைத்துறை மூலம் தனியாருக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்த நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.28/2009, நாள்: 12.2.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.31/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.8.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.8.ந.க.எண்.அ1/785/2009
ஆணையர் அவர்களின் 12.02.2009 நாளிட்ட குறிப்பு

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :64/2009 பொருள் எண்.18

**நிலம் கையகப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–8, பகுதி–22, வார்டு–116ல் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கம் சாலையானது (சேமியர்ஸ் சாலை ) அண்ணா சாலை மற்றும் கோட்டூர்புரம் பாலம் அமைந்துள்ள டர்ன்புல்ஸ் சாலை ஆகியவற்றை அடைய பயன்படுத்தப்பட்டு வரும் முக்கியமான சாலையாகும். அண்ணா சாலை, டி.டி.கே. சாலை மற்றும் கிரீன்வேஸ் சாலையில் இருந்து வரும் வாகனங்கள் பெருமளவில் இச்சாலை வழியாகவே செல்கின்றன. இச்சாலை குறுகலாக இருப்பதால் வாகன போக்குவரத்தில் நெரிசல் ஏற்படுகின்றது. இதனை தவிர்க்கும் பொருட்டு, அச்சாலையில் உள்ள தனியார் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான சில கதவிலக்கங்களின் நிலம் மற்றும் கட்டிடப் பகுதிகளை கையகப்படுத்தி, சாலை விரிவாக்கப் பணிக்கு உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வார்டு–116ல் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கம் சாலையில் (சேமியர்ஸ் சாலை ) சாலை விரிவாக்கப் பணிக்கு கையகப்படுத்தப்பட வேண்டிய தனியார் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டிடப் பகுதிகளின் விவரம் பின்வருமாறு :–

| வ.எண். | கதவு எண் | கையகப்படுத்தப்பட வேண்டிய | |
|---|---|---|---|
| | | கட்டிடத்தின் பரப்பு | நிலத்தின் பரப்பு |
| 1. | 70 (தனியார்) | | 2.00 ச.மீ. |
| 2. | 72 (தனியார்) | 3.00 ச.மீ. | |
| 3. | 74 (தனியார்) | 5.00 ச.மீ. | |
| 4. | 76 (தனியார்) | 3.00 ச.மீ. | |
| 5. | 78 (தனியார்) | | 18.00 ச.மீ. |
| 6. | Housing Board Block | | 76.00 ச.மீ. |
| 7. | 80 (தனியார்) | | 50.00 ச.மீ. |
| 8. | 82 (தனியார்) | | 21.00 ச.மீ. |
| | **மொத்தம்** | **11.00 ச.மீ.** | **167.00 ச.மீ.** |

இவ்விரிவாக்க பணி மூலம் பசும்பொன் முத்துராமலிங்கம் சாலையில் (சேமியர்ஸ் சாலை ) வழியாக வரும் வாகனங்கள் நெரிசல் இன்றி செல்ல ஏதுவாக அமையும். எனவே இத்திட்டத்தின் மூலம் சுமார் 11.00 ச.மீ. கட்டிடப் பரப்பு மற்றும் 167.00 ச.மீ. நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு, அந்நிலத்தை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத் தொகையினை செலுத்தி, நிலம் மற்றும் உடமைத்துறை மூலம் தனியார் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான நிலத்தை நிலமெடுப்பு செய்திடுவதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.29/2009, நாள்: 12.2.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.32/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.8.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/4681/2008**
**11.2.2009 நாளிட்ட ஆணையர் அவர்களின் குறிப்பு.**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :65/2009 பொருள் எண்.19

**40 எண்ணிக்கைகளில் 6 கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட சிறிய காம்பேக்டர்கள் தென் சென்னைக்கு கொள்முதல் செய்தல்**

சென்னை மாநகராட்சியில் குப்பை அகற்றப்பயன்படும் 10 வருடங்களுக்கு மேலாக மோசமான நிலையில் ஓடிக்கொண்டிருக்கும் இலகு ரக வாகனங்களை (LMV) கழிவு செய்யும்பொருட்டு, முதற்கட்டமாக 40 எண்ணிக்கைகளில் சிறிய காம்பெக்டர்கள் வாங்க தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஒப்பம் 5.9.2008 அன்று கோரப்பட்டு கலந்து கொண்ட 3 ஒப்பந்ததாரர்களில், தகுதி பெற்ற 2 ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மன்ற அனுமதி பெற்றப்பின் 11.10.2008 அன்று கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது.

இதனிடையே, தேவைக்கேற்ப இரண்டாம் கட்டமாக 24.10.2008 அன்று மேலும் 85 காம்பெக்டர்கள் கொள்முதல் செய்ய (40 மற்றும் 45 எண்ணிக்கைகளில்வடசென்னை மற்றும் தென் சென்னை பகுதிகளுக்கு இரு ஒப்பங்களாக ) ஒப்பங்கள் கோரப்பட்டதில் கலந்து கொண்ட இரு தகுதி பெற்ற ஒப்பதாரர்களில், திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் குறைந்த விலைப்புள்ளி அளித்தனர். இவ்விலைப்புள்ளியானது முதற்கட்டமாக கோரப்பட்ட குறைந்த விலைப்புள்ளியைவிட ஒரு காம்பெக்டர் 1,07,000/– வீதம் குறைவாகவும், மற்றும் பராமரிப்பு தொகையில் ஒரு நாளைக்கு ஒரு காம்பெக்டருக்கு ரூ.10/– குறைவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.9.2008 மற்றும் 24.10.2008 அன்று, 40 எண்ணிக்கைகள் மற்றும் 85 எண்ணிக்கைகள் கொள்முதல் செய்வதற்காக திறக்கப்பட்ட ஒப்பங்களில் முறையே குறைவான விலைப்புள்ளிகள் அளித்த திருவாளர்கள்.அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் மற்றும் திருவாளர்கள்.காம் அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத்தொகை ஒப்பு நோக்குதலுக்காக கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| Sl. No. | Particulars of 6 cu.m compactor. | Quoted by M/s Antony Motors Ltd., ( First phase ) Rs. | **Quoted by M/s Kam Avida Enviro Engrs.P.Ltd. (Second phase) Rs.** |
|---|---|---|---|
| 1. | Chassis Plus Cabin Including Transportation, Transit Insurance and all other Taxes. | 8,15,000.00 (Tata 1112/36 Chassis) | **7,75,000.00 (Eicher 11.10 Chassis)** |
| 2. | Compactor (6Cu.m) Equipment Including Transportation, Transit Insurance and all other Taxes. | 7.69.500.00 | **7,02,500.00** |
| 3. | Total for 1 no. (Chassis + Equipment) | 15,84,500.00 | **14,77,500.00** |
| 4. | Total for 40 nos. Chassis + Equipment) | 6,33,80,000.00 | **5,91,00,000,00** |
| 6. | Maint cost/day/per vehicle for 4 years | 3,83,250.00 | **3,72,300.00** |
| 7. | Total Maint. cost For 40 vehicles for 4 yrs. | 1,53,30,000.00 | **1,48,92,000.00** |
| 8. | Grand Total (Chassis + Equipment + Maint. cost For 40 vehicles) for 4yrs | 7,87,10,000.00 | **7,39,92,000.00** |

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/4681/2008**

The Maintenance costs quoted by the two eligible bidders are as follows:

| | M/s.Antony Motors | | M/s.Kam Avida | |
|---|---|---|---|---|
| Description | Cost per day per vehicle Rs. | Cost for 40 nos. for 4 years Rs. | Cost per day per vehicle Rs. | Cost for 40 nos. for 4 years Rs. |
| I Year | FREE | FREE | FREE | FREE |
| II Year | 300.00 | 43,80,000.00 | 290.00 | 42,34,000.00 |
| III Year | 340.00 | 49,64,000.00 | 330.00 | 48,18,000.00 |
| IV Year | 410.00 | 59,86,000.00 | 400.00 | 58,40,000.00 |

மேற்குறிப்பிட்ட பட்டியலின்படி, இரண்டாம் கட்டமாக கோரப்பட்ட ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.காம் அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அவர்களின் விலைக்கு சமமாக, முதற்கட்டமாக கோரப்பட்ட ஒப்பத்தின் இறுதி விலைப்புள்ளி அளித்த ஒப்பதாரர் திருவாளர்கள்.அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களை பேச்சு வார்த்தை மூலம் விலைக்குறைப்பு செய்யக்கோரி, **25.10.2008** தேதியிட்ட கடிதம் மற்றும் **3.11.2008** தேதியிட்ட தந்தி ஆகியன மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும், **11.11.2008** அன்று நடந்த ஒப்பக்குழு கூட்டத்திலும் இவ்வாறே விலைக்குறைப்பு செய்யக்கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர், தொடர்ந்த பேச்சு வார்த்தைகளுக்குப்பின், திருவாளர்கள்.அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அவர்கள், தனது **28.11.2008** தேதியிட்ட கடிதம் மூலம், இரண்டாம் கட்டமாக **85** எண்ணிக்கைகளில் சிறிய காம்பெக்டர்கள் கொள்முதல் செய்ய கோரியிருந்த கோப்பில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.காம் அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்த விலைக்கு சமமாகவே விலைக்குறைப்பு செய்ய சம்மதம் தெரிவித்தனர். அவை கீழ்வருமாறு:

1. **6** கன மீட்டர் கொள்ளளவு கொண்ட டாடா **1112/36**
   சேசஸின் மேல் பொருத்தப்பட்ட சிறிய காம்பெக்டர் ஒன்றின் விலை – ரூ.**14,77,500.00**
   (சேசஸ் – ரூ.**7,75,000.00** + காம்பெக்டர் ரூ.**7,02,500.00** )
   மற்றும்
2. **பராமரிப்பிற்கான செலவு**

| | | |
|---|---|---|
| முதல் வருடம் | – | இலவசம். |
| இரண்டாம் வருடம் | – | ரூ.**290/–** நாள் ஒன்றுக்கு |
| மூன்றாம் வருடம் | – | ரூ.**330/–** நாள் ஒன்றுக்கு |
| நான்காம் வருடம் | – | ரூ.**400/–** நாள்ஒன்றுக்கு |

அதாவது, சேஸிஸ் உடன் கூடிய சிறிய காம்பெக்டர்

| | |
|---|---|
| **40** எண்ணிக்கைகளின் விலை | – ரூ.**5,91,00,000.00** |
| பராமரிப்பு தொகை ( **40** எண்ணிக்கைகள்) | – ரூ.**1,48,92,000.00** |
| மொத்தம் | ரூ.**7,39,92,000.00** |

மேற்படி விலைகளுக்கேற்ப **24.11.2008** அன்று, திருத்திய கொள்முதல் ஆணை திருவாளர்கள்.அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு **40** சிறிய காம்பெக்டர்கள் கொள்முதல் செய்யும்பொருட்டு வழங்கப்பட்டது. இந்த விலை குறைப்பினால் மாநகராட்சிக்கு ரூ.**42,80,000/–** மிச்சமாகிறது.

மேலும் **25.11.2008** அன்று ஆணையர் அவர்களுடன் இதற்கான உடன்படிக்கையும் செய்து கொள்ளப்பட்டது.

எனவே,

1. **40** எண்ணிக்கைகளில் **6** கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட டாடா **1112/36** சேசிஸின் மேல் பொருத்தப்பட்ட காம்பெக்டர் உபகரணங்கள் மற்றும் **4** வருடங்களுக்கு ஆகும் பராமரிப்பு தொகையையும் சேர்த்து விலை குறைப்புக்குப்பின் மொத்த தொகை ரூ.**7,39,92,000/–** க்கான திருவாளர்கள்.அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும், அதன்படி கொள்முதல் ஆணை வழங்கி உடன்படிக்கை செய்து கொண்டதற்கும், பின்னேற்பு ஆணை வழங்கவும்,

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/4681/2008**

2. முதல் இனம் ஏற்கப்படின் 40 எண்ணிக்கைகளில் 6 கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட காம்பெக்டர்களில் கொள்முதல் தொகையான ரூ.5,91,00,000/–ஐ JNNURM மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் துறையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதியிலிருந்து வழங்கவும்,

3. 4 வருடத்திற்கான பராமரிப்பு ( முதல் ஆண்டு பராமரிப்பு செலவு தவிர்த்து) மொத்த தொகையான ரூ.1,48,92,000/–ஐ இயந்திரப் பொறியியல் துறையின் வடசென்னை மற்றும் தென்சென்னை வாகன பணிமனையின் கணக்கு எண்.209, இலகு ரக வாகன பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.25/2009, நாள்: 12.2.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.37/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2134/2008**

**ஆணையர் அவர்களின் 11.02.2009 நாளிட்ட குறிப்பு**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :66/2009 பொருள் எண்.20

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் வடக்கு நீர் தேக்க பகுதி**

சென்னை மாநகராட்சி வெள்ள தடுப்பு திட்டத்திற்காக பொதுப்பணித்துறையும், சென்னை மாநகராட்சியும் ஒருங்கிணைந்து சென்னை மாநகர் முழுவதற்கும் கலந்தறிதற்குரியவரை நியமித்து அவர்கள் மூலம் நில அளவை பணிகள் மேற்கொண்டு வடிவமைப்புகள் தயாரித்து, நீண்ட கால விரிவான திட்டம் பெறப்பட்டு , நிரந்தர தீர்வுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இதில் சென்னை மாநகர் முழுவதும் நில அளவை செய்யப்பட்டு நான்கு நீர் தேக்க பகுதிகளாக பிரிக்கப்பட்டது. இவற்றில் வடக்கு நீர் தேக்க பகுதியும் ஒன்றாகும். இதில் கொளத்தூர் நீர் தேக்க பகுதி, கேப்டன் காட்டன் கால்வாய் நீர் தேக்க பகுதி, ஓட்டேரி நல்லா நீர் தேக்க பகுதி ஆகியன அடங்கும். இப்பகுதியில் புதிய மழைநீர்வடிகால்வாய்கள் கட்டுதல், மழைநீர் கால்வாய் மேம்பாட்டுப் பணிகள், தூர் ஆய்வறை கட்டுதல், கொடுங்கையூர் கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், ஓட்டேரி நல்லா கரைகள் கட்டுதல், தரை அமைத்தல் ஆகியன திட்டமிடப்பட்டுள்ளன. இப்பகுதிக்கு 19.12.2008 அன்று மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பீடுத் தொகை ரூ. 359.86 கோடிகளாகும். இதில் பொதுப்பணித்துறையின் ஒதுக்கீடு ரூ. 82.69 கோடிகள், சென்னை மாநகராட்சியின் ஒதுக்கீடு ரூ. 277.17 கோடிகள்.

எனவே சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 277.17 கோடிக்கு தமிழக அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலமாக ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.21/2009, நாள்: 12.2.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.33/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.நீ.வ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2132/2008</u>
<u>ஆணையர் அவர்களின் 11.02.2009 நாளிட்ட குறிப்பு</u>

**<u>23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :67/2009 பொருள் எண்.21

<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம்</u>
<u>கிழக்கு நீர் தேக்க பகுதி</u>

சென்னை மாநகராட்சி வெள்ள தடுப்பு திட்டத்திற்காக பொதுப்பணித்துறையும், சென்னை மாநகராட்சியும் ஒருங்கிணைந்து சென்னை மாநகர் முழுவதற்கும் கலந்தறிதற்குரியவரை நியமித்து அவர்கள் மூலம் நில அளவை பணிகள் மேற்கொண்டு வடிவமைப்புகள் தயாரித்து, நீண்ட கால விரிவான திட்டம் பெறப்பட்டு , நிரந்தர தீர்வுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இதில் சென்னை மாநகர் முழுவதும் நில அளவை செய்யப்பட்டு நான்கு நீர் தேக்க பகுதிகளாக பிரிக்கப்பட்டது. இவற்றில் கிழக்கு நீர் தேக்க பகுதியும் ஒன்றாகும். இதில் பக்கிங்ஹாம் கால்வாய் நீர் தேக்க பகுதி மற்றும் ராயபுரம் நீர் தேக்க பகுதி ஆகியன அடங்கும். இப்பகுதியில் புதிய மழைநீர்வடிகால்வாய்கள் கட்டுதல், மழைநீர் கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் , தூர் ஆய்வறை கட்டுதல் ஆகியவைகள் திட்டமிடப்பட்டுள்ளன. இப்பகுதிக்கு 14.01.2009 அன்று மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பீடுத் தொகை ரூ. 444.07 கோடிகளாகும். இதில் பொதுப்பணித்துறையின் ஒதுக்கீடு ரூ. 303.67 கோடிகள், சென்னை மாநகராட்சியின் ஒதுக்கீடு ரூ. 140.40 கோடிகள்.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 140.40 கோடிக்கு தமிழக அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலமாக ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.22/2009, நாள்: 12.2.2009—ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.34/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.நீ.வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2133/2008</u>**
**<u>ஆணையர் அவர்களின் 11.02.2009 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :68/2009 பொருள் எண்.22

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம்</u>**
**<u>மத்திய நீர் தேக்க பகுதி</u>**

சென்னை மாநகராட்சி வெள்ள தடுப்பு திட்டத்திற்காக பொதுப்பணித்துறையும், சென்னை மாநகராட்சியும் ஒருங்கிணைந்து சென்னை மாநகர் முழுவதற்கும் கலந்தறிதற்குரியவரை நியமித்து அவர்கள் மூலம் நில அளவை பணிகள் மேற்கொண்டு வடிவமைப்புகள் தயாரித்து, நீண்ட கால விரிவான திட்டம் பெறப்பட்டு , நிரந்தர தீர்வுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இதில் சென்னை மாநகர் முழுவதும் நில அளவை செய்யப்பட்டு நான்கு நீர் தேக்க பகுதிகளாக பிரிக்கப்பட்டது. இவற்றில் மத்திய நீர் தேக்க பகுதியும் ஒன்றாகும். இதில் கூவம் நீர்த் தேக்க பகுதி, விருகம்பாக்கம் கால்வாய் நீர்த் தேக்க பகுதி, மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்தேக்க பகுதி ஆகியன அடங்கும். இப்பகுதியில் புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டுதல், மழைநீர் வடிகால்வாய் மேம்பாட்டுப் பணிகள், தூர் ஆய்வறை கட்டுதல், விருகம்பாக்கம் கால்வாய் தடுப்பு சுவர், மாம்பலம் கால்வாய், நந்தனம் கால்வாய் மேம்பாட்டு பணிகள் ஆகியவைகள் திட்டமிடப்பட்டுள்ளன. இப்பகுதிக்கு 29.12.2008 அன்று மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பீடுத் தொகை ரூ. 345.00 கோடிகளாகும். இதில் பொதுப்பணித்துறையின் ஒதுக்கீடு ரூ. 83.89 கோடிகள், சென்னை மாநகராட்சியின் ஒதுக்கீடு ரூ. 261.11 கோடிகள்.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 261.11 கோடிக்கு தமிழக அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலமாக ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.23/2009, நாள்: 12.2.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.35/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.நீ.வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2131/2008
ஆணையர் அவர்களின் 11.02.2009 நாளிட்ட குறிப்பு

## 23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :69/2009 பொருள் எண்.23

### ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம்
### தெற்கு நீர் தேக்க பகுதி

சென்னை மாநகராட்சி வெள்ள தடுப்பு திட்டத்திற்காக பொதுப்பணித்துறையும், சென்னை மாநகராட்சியும் ஒருங்கிணைந்து சென்னை மாநகர் முழுவதற்கும் கலந்தறிதற்குரியவரை நியமித்து அவர்கள் மூலம் நில அளவை பணிகள் மேற்கொண்டு வடிவமைப்புகள் தயாரித்து, நீண்ட கால விரிவான திட்டம் பெறப்பட்டு , நிரந்தர தீர்வுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இதில் சென்னை மாநகர் நில அளவை செய்யப்பட்டு நான்கு நீர் தேக்க பகுதிகளாக பிரிக்கப்பட்டது. இவற்றில் தெற்கு நீர் தேக்க பகுதியும் ஒன்றாகும். இதில் அடையாறு ஆறு நீர் தேக்க பகுதி, வேளச்சேரி நீர் தேக்க பகுதி, பள்ளிகரணை, வீராங்கல் ஓடை ஆகியவை அடங்கும். இப்பகுதியில் புதிய மழைநீர் வடிகால்வாய்கள் கட்டுதல், மழைநீர் வடிகால்வாய் மேம்பாட்டுப் பணிகள், தூர் ஆய்வறை கட்டுதல், நீர்வழி கால்வாய் தூர்வாரி வேலி அமைத்தல் ஆகியவைகள் திட்டமிடப்பட்டுள்ளன. இப்பகுதிக்கு 22.01.2009 அன்று மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பீடுத் தொகை ரூ. 298.98 கோடிகளாகும். இதில் பொதுப்பணித்துறையின் ஒதுக்கீடு ரூ. 162.78 கோடிகள், சென்னை மாநகராட்சியின் ஒதுக்கீடு ரூ. 136.20 கோடிகள்.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 136.20 கோடிக்கு தமிழக அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலமாக ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.24/2009, நாள்: 12.2.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.36/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.நீ.வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.பி3/2710/2007

ஆணையர் அவர்களின் 12.02.2009 நாளிட்ட குறிப்பு.

## 23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :70/2009 பொருள் எண்.24

### பெரம்பூர் இறைச்சிக்கூடத்தை நவீனப்படுத்துதல்

சென்னை மாநகராட்சி வசமுள்ள பெரம்பூர் இறைச்சிக்கூட வளாகத்தை நவீனப்படுத்திட ஏதுவாக கட்டி, செயல்படுத்தி ஒப்படைப்பு செய்யும் திட்டத்தின்படி (BOT BASIS) தனியார் மூலம் நவீனப்படுத்திடவும் 20 ஆண்டுகள் ஒப்பந்தக்காலம் முடிந்தப்பின் சென்னை மாநராட்சி வசம் ஒப்படைக்கும் திட்டத்திற்கு அரசின் அரசாணை எண்.41, நாள்.04.02.1999, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந1) துறை மூலம் ஆணையிடப்பட்டது. இதன் அடிப்படையில் ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்பந்ததாரர் டாக்டர்.பக்தா அவர்கள் தீட்டிய திட்டத்தை சில மாறுதல்களுடன் ஏற்று சலுகை உடன்படிக்கை (Concession Agreement) ஏற்படுத்த அரசின் அனுமதி சிறப்பு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடித எண்.15499/மா.ந1/2002, நாள்.05.04.2004ல் பெறப்பட்டது. இதன்படி (BOT) ஒப்பந்ததாரர் டாக்டர் பக்தா அவர்கள் ரூ.50.00 இலட்சங்கள் செயலாக்க பிணை வைப்புத்தொகை செலுத்தியப்பின் 29.06.2004 அன்று சலுகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி பி.ஓ.டி. ஒப்பந்ததாரர் டாக்டர் பக்தா அவர்கள் ரூ.25.00 கோடி நிதி ஆதாரத்தினை (Financial Closure) குறிப்பிட்ட காலத்திற்குள் உறுதி செய்யாததால், இவர் செலுத்திய செயலாக்க பிணை வைப்புத்தொகை ரூ.50.00 இலட்சங்கள் பறிமுதல் செய்யப்பட்டு இவருடன் ஏற்படுத்தப்பட்ட சலுகை உடன்படிக்கை 29.06.2005 அன்று ரத்து செய்யப்பட்டது.

எனவே, பொது மக்கள் நலன் மற்றும் பொது சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (DBOT) ஒப்பந்த முறையில் தனியார் மூலம் நவீனப்படுத்த முடிவெடுக்கப்பட்டு இத்திட்டத்தின்கீழ் ஆரம்ப அறிக்கை, விரிவான திட்ட அறிக்கை (DPR), திட்ட ஒப்ப ஆவணங்கள் (RFP), ஒப்பப்புள்ளி அறிவிப்பு, ஒப்ப ஆவணங்கள் தயாரித்தல், பெறப்படும் ஒப்பங்களை ஆய்வு செய்து பரிந்துரை செய்யவும் அதற்கான நியாயப்படுத்தல் அறிக்கையும் சமர்ப்பிக்கவும். கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் ஜி.கே.சென் & அசோசியேட்ஸ் அவர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. இவர் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் தொழில்நுட்ப குழுமம் அமைக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டப்பின் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் தயாரித்த ஒப்ப ஆவணங்களின்படி சலுகைக்காலம் 14 ஆண்டுகள் என நிர்ணயித்து விரிவான விளம்பரங்கள் மூலம் 20.05.2008 அன்று ஒப்பங்கள் கோரப்பட்டன. ஆனால் ஒப்ப இறுதி நாளான 03.07.2008 அன்று ஒப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. மீண்டும் சலுகைக்காலம் 17 ஆண்டுகள் என மாற்றம் செய்யப்பட்டு 15.07.2008 அன்று 2ம் முறையில் ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்ப இறுதி நாளான 05.09.2008 அன்றும் ஒப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. எனவே, சலுகைக்காலம் 22 ஆண்டுகள் (அதாவது கட்டுமானக்காலம் 20 மாதங்கள் உட்பட) என மீண்டும் மாற்றம் செய்யப்பட்டு 3ம் முறையாக 07.10.2008 அன்று ஒப்பங்கள் கோரப்பட்டன. இவ்வொப்பப்பணியின் முன் ஒப்பக்கூட்டத்தில் (Pre-Bid Meeting) கலந்துக்கொள்ள யாரும் விருப்பம் தெரிவிக்காததால் ஒப்ப தேதியை 28.11.2008லிருந்து 19.12.2008க்கும் 19.12.2008லிருந்து 09.01.2009க்கும் இறுதியாக 09.01.2009யிலிருந்து 23.01.2009க்கு மாற்றம் செய்யப்பட்டது. ஒப்ப இறுதி நாளான 23.01.2009 அன்று ஒற்றை ஒப்பம் திருவாளர்கள் இந்த் அக்ரோ இன்டஸ்ட்ரிஸ், புது டெல்லி அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இவர்கள் அளித்துள்ள ஒப்பத்தின்படி இத்திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள் கீழ் வருமாறு :–

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்ததாரரரின் முதலீடு | – | ரூ.1621.01 இலட்சங்கள் |
| 2. | ஒப்பந்ததாரரால் கடனாக பெறப்படும் தொகை | – | ரூ.3113.63 இலட்சங்கள் |
| 3. | மத்திய அரசின் மான்யம் (MFPI Grant) | – | ரூ.1500.00 இலட்சங்கள் |
| | மொத்தம் | | ரூ.6234.64 இலட்சங்கள் |

மற்றும் ஒப்பந்ததாரர் தன் ஒப்பப்படிவத்தில் ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சலுகைக்கட்டணமாக "இல்லை" (NIL) எனக் குறிப்பிட்டிருந்தார். இது சம்பந்தமாக ஒப்பந்ததாரரிடம் விளக்கம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் தன்னுடைய 10.02.2009 நாளிட்ட கடிதத்தில் ஒவ்வொரு ஆண்டும் அதாவது கட்டுமானப்பணிகள் முடித்தப்பின் நவீன இறைச்சிக்கூடத்தை ஒரு வருடக்காலத்திற்கு வெற்றிகரமாக இயக்கியப்பின் சென்னை மாநகராட்சிக்கு சலுகை கட்டணமாக ரூ.40.00 இலட்சங்கள் செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட திருவாளர்கள் இந்த் அக்ரோ இன்டஸ்ட்ரிஸ் லிமிடெட் அவர்களின் ஒப்பம் 11.02.2009 அன்று நடைபெற்ற ஒப்பக்குழு (Tender Committee) முன் சமர்ப்பிக்கப்பட்டு பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை, பெரம்பூரில் உள்ள சென்னை மாநகராட்சி வசமுள்ள இறைச்சிக்கூடத்தை "வடிவமைத்தல்", கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (DBOT) ஒப்பந்த முறையில் நவீனப்படுத்த திருவாளர்கள் இந்த் அக்ரோ இன்டஸ்ட்ரிஸ் லிமிடெட் அவர்கள் சமர்ப்பித்த ஒப்பத்தை ஏற்க அனுமதியும்,

2. ஒப்பந்ததாரர் திருவாளர்கள் இந்த் அக்ரோ இன்டஸ்ட்ரிஸ் லிமிடெட் அவர்கள் கட்டுமான பணிகள் முடித்து ஓர் ஆண்டு இறைச்சிக்கூடம் இயக்கியப்பின் ஒவ்வொரு ஆண்டும் சலுகைக் கட்டணமாக ரூ.40.00 இலட்சங்கள் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த இசைவு தெரிவித்ததை ஏற்க அனுமதியும்,

3. மேற்கண்ட இறைச்சிக்கூடம் ஒப்பந்ததாரர் திருவாளர்கள் இந்த் அக்ரோ இன்டஸ்ட்ரிஸ் லிமிடெட் அவர்களுக்கு 22 ஆண்டுகளுக்கு (20 மாதங்கள் கட்டுமான பணிக்காலம் உட்பட) "வடிவமைத்தல்", கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (DBOT) முறை மூலம் ஒப்படைக்க அனுமதியும்,

4. ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கவும் நிலைக்குழுக்கள் (சுகாதாரம்), (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.27/2009, நாள்: 12.2.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே 10.02.2009 அன்று நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் தீர்மான எண்:07/2009 நாள்:12.02.2009ன்படி வார்டுகுழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"16.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.38/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

இ.பொ.து.ந.க.எண்.எம்4/3448/2008
ஆணையாளர் அவர்களின் 14.02.2009 நாளிட்ட குறிப்பு

23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :71/2009 பொருள் எண்.25

வயது முதிர்வு ஓய்வு

திரு. மு. ரகுபதி, மேற்பார்வைப் பொறியாளர் (இ) அவர்கள் 28.02.2009 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் 31.03.1975 அன்று உதவி ஃபோர்மேனாக பணியில் சேர்ந்தார். பின்பு, உதவி செயற் பொறியாளராகவும், செயற் பொறியாளராகவும், பதவி உயர்வு பெற்று 04.09.2006 அன்று முதல் மேற்பார்வைப் பொறியாளராக (இயந்திரம்) பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார்.

தனியர் மீது விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்குநரகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மூன்று கோப்புகளில் விதி எண். 10 (பி)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்குநரகம் மற்றும் புலனாய்வு துறைக்கும் விசாரணை ஏதும் நிலுவையில் உள்ளதா என கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. இந்நாள் வரை பதில் பெறப்படவில்லை. மேற்சொன்ன மூன்று கோப்புகள் தவிர இவர் மீது குற்றச்சாட்டுகளோ விசாரணையோ நிலுவையில் இல்லை.

சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்திற்கு விசாரணை நிலுவை குறித்து விவரங்கள் கோரி குறிப்பு அனுப்பப்பட்டது. 21.1.2009 நாளிட்ட விழிப்பு அலுவலரின் குறிப்பில் இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–6ல், 4 இனங்களில் பின்வருமாறு தணிக்கை தடைகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பத்தி | வருடம் | நிதி ரூ. | தணிக்கை தடை சுருக்கம் | இழப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 13 | 2001–02 | 27,10,585/– | புதியதாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்குரிய 244ஏன்படி தண்டனைத் தொகை வசூலிக்கப்படவில்லை. | கூட்டு பொறுப்பு |
| 40 | 2001–02 | 4,221/– | கோட்டம் – 94. 2002ம் ஆண்டு குடியரசு தினத்தினையொட்டி காமராசர் சாலை, ராணிமேரி கல்லூரி எதிரில் நடைபாதை சீர் செய்யும் பணி பயன்படுத்தப்படாத கொர்பு விவரங்கள் | கூட்டு பொறுப்பு |
| 09 | 2002–03 | –– | புதியதாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்குரிய 244ஏ ன்படி தண்டனைத் தொகை வசூலிக்கப்படவில்லை | கூட்டு பொறுப்பு |
| 09 | 2003–04 | –– | புதியதாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்குரிய 244ஏ ன்படி தண்டனைத் தொகை வசூலிக்கப்படவில்லை | கூட்டு பொறுப்பு |

**இ.பொ.து.ந.க.எண்.எம்4/3448/2008**

பத்தி 13 / 2001 – 02, பத்தி 09 / 2002 – 03 மற்றும் பத்தி 09 /2003 – 04க்கு சென்னை மாநகராட்சி துவங்கப்பட்டது முதல் அனுமதி பெற்று முறையாக கட்டப்படாத கட்டிடங்கள் வார்டு பொறியாளர்கள் ஆய்வுக்குப் பிறகு 244 ஏ அறிவிப்பு அளித்து நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்து தீர்ப்பிற்குப் பிறகு தண்டனை தொகையினை கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் பரப்பளவிற்கு ஏற்றவாறு வசூலிக்க M.C.M.C ACT ன் படி வருவாய்த் துறைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இத்தண்டனை தொகைகளை சொத்து வரியுடன் சேர்த்து வசூலிப்பதில் வருவாய்த் துறை சார்ந்த அலுவலர்களின் மெத்தனப் போக்குடன் இருந்தபடியால் இப்பணியினை குறிப்பிட்ட காலத்திற்கு துரிதப்படுத்துவதற்கு மேற்பார்வை செய்யும்படி பொறியாளர்களுக்கு உயர் அலுவலர்களால் அறிவுறுத்தப்பட்டது. பொறியாளர்கள் தண்டனை தொகையை நேரடியாக வசூல் செய்ய M.C.M.C ACT ன் படி அதிகாரம் கிடையாது. இதன்படி சொத்து வரியுடன் தண்டனை தொகையையும் சேர்த்து வசூலிக்கப்படாமைக்கு பொறியாளர்களை கூட்டுப் பொறுப்பாக்குவது முற்றிலும் தவறாகும்.

பத்தி 40 / 2001 – 02–க்கான தணிக்கை தடையினை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், கட்டிடத் துறையில் 2000–2001 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி கோட்டம்–10 தொப்பை விநாயகர் தெருவில் சத்துணவுக் கூடம் கட்டிய பணியில் திரு. மு.ரகுபதி, செயற் பொறியாளர் அவர்களை கூட்டு பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை பத்தி 22/உ.ப தடைச்சீட்டு எண்.14/2000–2001 நிலுவையில் உள்ளது.

விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககத்தில் கீழ் கண்டுள்ள இரண்டு தடைகள் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

1. கது.ந.க.எண்.பி1/மண்டல அலுவலகம்–1ல், கோட்டம்–8ல் LIG காலனியில் சமுதாயக்கூடம் கட்டியதில் இழப்பீடு தொகை ரூ.19,110/– என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. க.து.ந.க.எண்.பி2/6566/97 மண்டல அலுவலகம்–2, கோட்டம்–24ல் கூடைப் பந்து திடலில், பார்வையாளர் படிக்கட்டு கட்டியதில் ஏற்பட்டதாக தெரிவிக்கும் இழப்பீடு ரூ.3,793/–

தணிக்கை தடை பத்தி எண்.15/2001–2002, க.து.ந.க.எண்.பி3/6026/97 மண்டல அலுவலகம்–3, கோட்டம்–36ல் தொடக்க நிலை பள்ளியில் 3+3+3 பள்ளி அறை கட்டியதிலும் மேல் கூரை மாற்றப்பட்டு கான்கிரீட் தளம் அமைத்ததிலும் சில குறைபாடுகள் உள்ளதாக மேற்பார்வைப் பொறியாளர் (க) அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியரை பொறுப்பாக்கும் இழப்பீட்டுத் தொகை ரூ.80189/–

தனியர் வகுப்பு – 1பி–ஐ சார்ந்த அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெற்ற பின்னரே, இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க இயலும்.

எனவே, மேற்பார்வை பொறியாளர் திரு.மு.ரகுபதி, அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு எவ்வித குந்தகமின்றியும், உள்ளாட்சி நிதிதணிக்கையினரால் தெரிவிக்கப்பட்டுள்ள தணிக்கைத் தடைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி மற்றும் தனிப்பட்ட அலுவலக முன்பண நிலுவை காரணமாக ஏற்படும் நிதி இழப்பு இவரது பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், திரு.மு.ரகுபதி, மேற்பார்வைப் பொறியாளர்(இ) அவர்களை 28.02.2009 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## க.து.ந.க.எண்.தொ.ப.நி./078/2008
## ஆணையர் அவர்களின் 05.01.2009 நாளிட்ட குறிப்பு

## 23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :72/2009 பொருள் எண்.26

**மாநகராட்சி நிதியில் தொழிற்பயிற்சி நிலையம் நடத்தவும், பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கவும் அனுமதி வேண்டுதல்.**

அரசாணை நிலை எண் 55, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (எஸ் –2) துறை நாள் 26/04/1999ன் படி ஆறு தொழிற் பிரிவுகளுடன் ஒரு தொழிற் பயிற்சி நிலையத்தை சென்னை மாநகராட்சி 1999ம் கல்வி ஆண்டு முதல் சில நிபந்தனைகளுக்குட்பட்டு சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 80 விழுக்காடும் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு 20 விழுக்காடும் சேர்க்கப்பட வேண்டும் என்றும் மற்றும் தேசிய வாழ்வியல் தொழிற் பயிற்சி (NCVT) அங்கீகாரம் பெறுவதற்கு முன்னர், விதிமுறைகளை முழுமையாக பூர்த்தி செய்ய சென்னை மாநகராட்சிக்கு அறிவுறுத்தி ஆணையிடப்பட்டிருந்தது.

அரசாணையில் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் கடைப்பிடிக்கும் விதிகளும், ஒழுங்கு முறைகளும், கட்டணம் வசூலிப்பதும், இத் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு பயன்படுத்தி கொள்ளவும்

மேலும் 22 பணியாளர்களுக்கும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் சமுதாய இட ஒதுக்கீடு சுழற்சி முறையில் தொகுப்பூதியம் கால சம்பள ஏற்ற முறையில், குறைந்த பட்ச சம்பளம் மாதாந்திர தொகுப்பூதியமாக வழங்கவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்தொழிற் பயிற்சி நிலையத்தை ஊக்குவிக்க முதல் ஆண்டு 50 விழுக்காடும், இரண்டாம் ஆண்டு 25 விழுக்காடும் செலவீனத்தை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மூன்றாம் ஆண்டு முதல் முழுமையாக சுயநிதி அடிப்படையில் செயல்படவும் ஆணையிடப்பட்டிருந்தது.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919 விதி 90 (5)ன் படி மேற்கூறிய 22 பதவிகளை தோற்றுவித்தும், அவ்வாறு நியமனம் செய்யப்படவுள்ள பதவிகளுக்கு கால சம்பள ஏற்ற முறையில் குறைந்தபட்ச அடிப்படை ஊதியத்தை முறையே தொகுப்பூதியமாக வழங்கவும், இதற்கான நிதியை அரசு மேற்கொள்ளாது எனவும் அரசு ஆணையிடப்பட்டிருந்தது.

இவ்வரசாணையை மன்ற தீர்மானம் எண்.367 நாள்: 30/09/2004 அன்று நடந்த மன்ற கூட்டத்தில் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தொழிற்பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது.

தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஆகும் அனைத்து செலவினங்கள் மற்றும் பதவிகள் தொடர்பாக கீழ்கண்ட கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டது.

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் (COPA) பாட பிரிவை மத்திய அரசின் தேசிய வாழ்வியல் தொழிற் பயிற்சி (NCVT) அங்கீகாரத்துடன் ஜுலை 2007ம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது. இப்பாடப் பிரிவில் 2007–2008ம் கல்வியாண்டில் மாணவ மாணவிகள் சேர்க்கப்பட்டு அனைவரும் அகில இந்திய தேர்வு எழுதி முடித்துள்ளார்கள். மேலும் குழாய் பொருத்துநர் பாடப் பிரிவுக்காக தேசிய வாழ்வியல் தொழிற் பயிற்சி (NCVT) அங்கீகாரம் மார்ச் 2008ல் பெற்று மாணவ மாணவிகளை இரண்டு பாடப் பிரிவுக்கும் 2008–2009 ம் கல்வியாண்டில் பயிற்சிக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். அரசாணை எண் 55ன்படி மீதம் உள்ள நான்கு பாடப் பிரிவுகளும் (பிட்டர், மெக்கானிக் மோட்டார் வாகனம், மின்பணியாளர் மற்றும் எலக்ட்ரானிக் மெக்கானிக்) துவங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசாணை எண் 292/2004 ந.நி.ம.கு.வ.(மா.ந–III) துறை நாள் 06.08.2004ல் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் செலவினம் மற்றும் பணியாளர்கள் தேர்வு பற்றி கருத்துக்கள் தெரிவித்தும்,

**<u>க.து.ந.க.எண்.தொ.ப.நி./078/2008</u>**

சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையம் நலிந்த மற்றும் சமுதாயத்தில் பின் தங்கிய ஏழை எளிய மக்களின் நலனுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒன்று. அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் வசூலிக்கப்படும் பாடப் பிரிவுகளுக்கான கட்டணங்களை விட அதிகமான கட்டணம் சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் வசூலிக்க இயலாது. தற்போது அரசு விதிகளின் படி வசூலிக்கப்படும் கட்டணப்படி 6 பாடப் பிரிவுகளுக்கும், 240 மாணவர்களிடம் இருந்து மாணவர் ஒருவருக்கு ரூபாய் 1145/– வீதம் ஒரு வருடத்திற்கு மொத்தம் ரூபாய் 2,74,800/– ஆகும். இக்கட்டண தொகையை கொண்டு 22 பணியாளர்களுக்கு தொகுப்பூதியம் முழுமையாக வழங்க இயலாது. 22 பதவிகளுக்கும் தொகுப்பூதிய செலவினம் மட்டும் ஒரு வருடத்திற்கு ரூபாய் 12 லட்சம் ஆகும்

தற்போது அரசு வழங்கி உள்ள அரசாணை எண் 89 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 22.07.2008ன் படி அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் ஆண்டு தோறும் செலுத்தி வரும் சிறப்புக் கட்டணம் ரூபாய் 1200/– ஐ ஆகஸ்டு 2008 முதல் ரத்து செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மாணவ மாணவியரிடம் இருந்து பெறப்படும் மிக குறைந்த நிதியை மட்டுமே கொண்டு சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையம் நடத்துவது என்பது மிகவும் இயலாது ஒன்று.

இருப்பினும் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை எளிய குழந்தைகளின் நலனுக்காக வேலை வாய்ப்புடன் கூடிய வெவ்வேறு தொழிற் பிரிவுகளில் தொழிற் கல்வி வழங்க சென்னை மாநகராட்சியே தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஆன மொத்த செலவினங்களையும் (சுயநிதி அடிப்படைக்கு பதிலாக) ஏற்று நடத்த கருத்து தெரிவிக்கப்பட்டும், கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் (COPA) பாட பிரிவுக்கும் குழாய் பொருத்துநர் பாடப் பிரிவுக்கும் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஏற்கனவே ரூபாய் 13 லட்சம் மூலதன செலவாக செலவு செய்யப்பட்டுள்ளது மற்ற மூன்று பாட பிரிவுகளான பிட்டர், மெக்கானிக் மோட்டார் வாகனம் மற்றும் மின்பணியாளர் பாடப் பிரிவுகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்களுக்காக ரூபாய் 47 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பள்ளிகள் அடிப்படை உபயோகம் மூலதன வரவு செலவு திட்டத்தில் இருந்து எலக்ட்ரானிக் மெக்கானிக் பாடப் பிரிவுக்கு ரூபாய்.33 லட்சத்தில் உபகரணங்கள் கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே மேற் சொல்லப்பட்ட காரணங்களை கருத்தில் கொண்டு அரசிடம், அரசாணை எண் 292/2004 ந.நி.ம.கு.வ.(மா.ந–III) துறை நாள் 06.08.2004ல் வழங்கியதில் செலவின உட்பிரிவுகள் சம்மந்தமான அரசாணையை திரும்ப பெற்று எதிரிடையாக மாற்றி சம்மந்தப்பட்டவைகளை நிறைவேற்றும் வகையில் மொத்த செலவினங்களையும் சென்னை மாநகராட்சியே மேற்கொள்ளவும். மேலும் பணியாளர்களுக்கு ஊதியம் ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியமாக வழங்குவதற்கு பதிலாக தொகுப்பூதிய முறையினை மாற்றி கால முறை ஊதியத்தில் அரசு தொழிற் பயிற்சி நிலைய விதிகளின்படி சென்னை மாநகராட்சி நிதி ஒதுக்கீடிலிருந்து பணியிடங்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடித எண் 36789/MC3/ 2007–1. நாள் 06.11.2008ன் படி அரசாணை எண் 292 / MC-III/ 2006 நாள் 06/08/2008க்கு கீழ்காணும் திருத்திய ஆணையை அரசு அளித்துள்ளது.

## <u>AMENDMENT</u>

**"The Corporation of Chennai will fund the entire expenditure of the Industrial Training Institute and to pay Time Scale instead of consolidated pay on contract basis to the staff as per the Government norms from the fund of Chennai Corporation."**

<u>திருத்தம்</u>

**" சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் மொத்த செலவினங்களையும் சென்னை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியமாக வழங்குவதற்கு பதிலாக காலமுறை ஊதியத்தில் அரசு விதிகளின்படி மாநகராட்சி நிதியில் இருந்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது."**

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் 2007–2008 கல்வி ஆண்டில் பயிற்சி பெற்ற அனைத்து பயிற்சியாளர்களும் மத்திய அரசின் அகில இந்திய தொழிற் கல்வி தேர்வு எழுதி 100% தேர்ச்சி பெற்றுள்ளனர்.

<u>க.து.ந.க.எண்.தொ.ப.நி./078/2008</u>

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் தற்போது பிட்டர், கம்மியர் மோட்டார் வாகனம் மற்றும் மின்பணியாளர் பாடப் பிரிவுக்கு மத்திய அரசின் NCVT அங்கீகாரத்திற்காக மாநில அரசின் முதல் கட்ட ஆய்வு **05.09.2008**ல் முடிவு பெற்று மத்திய அரசின் நிலைக்குழு ஆய்வை எதிர்நோக்கி உள்ளது. வரும் கல்வி ஆண்டில் இம்மூன்று பாடப் பிரிவுகளுக்கும் சேர்த்து சேர்க்கை நடைபெறும் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆணை நிலை எண் **292**/ MC-III நாள் **06.08.2004**ல் உள்ள தற்போது அரசு வழங்கியுள்ள திருத்திய ஆணை கடிதம் எண் **36789**/MC3/ **2007–1** நாள் **06.11.2008**ல் ‘‘சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் மொத்த செலவினங்களையும் சென்னை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியாளர்களுக்கு தொகுப்பூதியம் ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு பதிலாக காலமுறை ஊதியத்தில் அரசு விதிகளின்படி மாநகராட்சி நிதியில் இருந்து வழங்கவும்’’ என தெரிவித்த திருத்திய ஆணையினை, ஆணை வெளியிட்ட நாள் **10.11.2008** முதல் அமலாக்கம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்காக நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**09.02.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண். **07/09** நாள் **09**.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி(ம)நி) மற்றும் நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**16.02.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.27/2009 , நாள்:16.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந. (ம) மா.கு.ந.க. எண் எப் 17/00485/09
ஆணையர் அவர்களின் 16.02.2009 நாளிட்ட குறிப்பு.

23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :73/2009 பொருள் எண்.27

சில்லரை செலவீனங்கள் உயர்த்தி வழங்க அனுமதி வேண்டி

09.02.09 அன்று ஆணையர் அவர்கள் சைதை மண்டலத்தில் ஆய்வு செய்ததில் 24 மணிநேர மருத்துவமனைகளில் அவசர அறுவை சிகிச்சை காலத்தில் தேவைப்படும் மருந்துகள், ஊசிகள் பற்றாக்குறை இருப்பது தெரிய வந்தது. இந்த செலவுகளுக்கு இதுவரை குறைந்த பட்ச முன்பணமாக ரூ.2,000/– வழங்கப்பட்டு வருகிறது. 24 மணி நேர மருத்துவமனைகளின் அவசர அறுவை சிகிச்சைக்காகத் தேவைப்படும் மருந்துகள், ஊசிகள் மருந்து கிடங்குகளில் இல்லாத பட்சத்தில், வெளியிலிருந்து கொள்முதல் செய்யவும், மற்றும் அவசர சில்லரை செலவினங்களுக்காகவும் இந்த முன்பணத் தொகையினை ரூ.10,000/– மாக உயர்த்தி வழங்க கோரப்பட்டது.

ஒவ்வொரு மண்டலத்திற்கும் ரூ.10,000/– வீதம் 10 மண்டலங்களுக்கு ரூ.1,00,000/– அவசர கால மருந்துகள் (ம) ஊசிகள் கொள்முதல் செய்யவும் மற்றும் அவசர கால சில்லரை செலவீனங்கள் செய்துகொள்ளவும் முன்பணத்தை உயர்த்தி வழங்க கோரப்படுகிறது. இதற்கு ஆகும் செலவினத்தை கணக்கு எண்.168 பிரிவு எண்.057ல் செலவு செய்யலாம்.

எனவே, ஒவ்வொரு மண்டலத்திற்கும் ரூ.10,000/– வீதம் 10 மண்டலங்களுக்கும் ரூ.1,00,000/– அவசர கால மருந்துகள் (ம) ஊசிகள் கொள்முதல் செய்யவும் மற்றும் அவசர கால சில்லரை செலவீனங்கள் செய்துகொள்ளவும் முன்பணத்தை உயர்த்தி வழங்க நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

ஏற்கனவே 10.02.2009 அன்று நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் தீர்மான எண்:08/2009 நாள்:16.02.2009ன்படி சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2009 அன்று தீர்மான எண்.39/2009ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்